# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. CC – 136/2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 3**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : பால்வண்ணன் | Caste | : | |
| Father/Husband Name | : கண்ணையாபேயாண்டித்தேவர் | Calling | : | |
| Village | : உடண்காட்டுபட்டி | Religion | : | |
| Taluk | : | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 07.02.2024.**

**(A1, A3 Present. A2 Died.)**

**முதல் விசாரணை:**

நான் உடன்காடுபட்டியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனக்கு சொந்தக்காரர் ஆவார். ஆஜர் எதிரிகள் பாண்டி மற்றும் சிவராஜாவை தெரியும். புகார்தாரர்களும் எதிரிகளும் சொந்தசம்பந்தமாக பிரச்சனை இருந்தது. 3 வருடங்களுக்கு முன்பு நான் எங்கள் ஊரில் உள்ள மந்தையில் உட்கார்ந்து இருந்தேன். மதியம் 2.00 மணயளவில் மந்தைக்கு அருகே உள்ள வீட்டில் எதிரி பாண்டி திருப்பிலியை வைத்து வேலை செய்து கொண்டிருந்தார். அப்போது அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் அந்த இடத்திற்கு வந்தார்கள். அப்போது எதிரிகளுக்கும், அ.சா.1 மற்றும் அ.சா.2க்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது எதிரி பாண்டி, திருப்பிலியை வைத்து அ.சா.1ன் தலையில் இடது பக்கத்தில் குத்திவிட்டார். அதில் அ.சா.1 மயங்கி விட்டார். பின்னர் அ.சா.2யை எதிரிகள் மூவரும் அடித்தார்கள். பின்னர் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் காவல் நிலையம் சென்றார்கள்.

**மறுவிசாரணை: இல்லை**

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. CC – 136/2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்வி | Caste | : | |
| Father/Husband Name | : | பஞ்சராஜா | Calling | : | |
| Village | : | உடண்காட்டுப்பட்டி | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 07.02.2024.**

**(A1, A3 Present. A2 Died. )**

**முதல் விசாரணை:**

நான் உடன்காடுபட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அப்பா ஆவார். ஆஜர் எதிரிகள் பாண்டி மற்றும் சிவராஜாவை தெரியும். இறந்த போன எதிரி ராஜாவை தெரியும். எதிரிகள் எனக்கு உறவினர்கள் ஆவார்கள். எங்களுக்கும் எதிரிகளுக்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்தது. இது சம்பந்தமாக வழக்கு நடந்து வருகிறது. அந்த வழக்கு நடந்து வரும் இடத்தில் எதிரிகள் கடந்த 2020ம் ஆண்டு பாண்டி, ராஜா, சிவராஜா ஆகியோர் வயரிங் வேலை செய்தார்கள். இதை நானும், எனது அப்பா அ.சா.1ம் தட்டி கேட்டோம். மேற்படி எதிரிகள் மூவரும் என்னை பார்த்து தேவிடியா, அவுசாரி, கண்டாரோலி என்று என்னை கெட்டவார்த்தைகளால் திட்டி எங்க வந்து சொத்தை கேட்கிறாய் என்று சத்தம் போட்டார்கள். அதற்கு நாங்கள் நீதிமன்றத்தில் உத்தரவு வாங்கி வைத்துள்ளோம் என்று கூறினோம். அப்போது 1வது எதிரி நீ எங்கே வேண்டுமானாலும் உத்தரவு வாங்கி வைத்துக்கொள் எனக்கு என்ன என்றார். பின்னர் எனது அப்பா அ.சா.1யை எதிரி ராஜா அடித்து கீழே தள்ளி விட்டார். அருகில் இருந்து பாண்டி என் அப்பாவை பார்த்து உனக்கென்ன சொத்து என்று திருப்பிலியால் எனது அப்பாவின் இடது பக்க தலையில் குத்தினார். மேற்படி மூன்று

எதிரிகளும் சேர்ந்து எனது தலை முடியைப்பிடித்து தரையில் தள்ளி குத்தினார்கள். நாங்கள் மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்று எனது அப்பா சிகிச்சை எடுத்துக்கொண்டார். கொரோனா நேரம் என்பதால் ஒரே நாளில் சிகிச்சை பெற்று வீட்டுக்கு வந்துவிட்டார். நானும், எனது அப்பாவும் விக்கிரமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம்.

**மறுவிசாரணை: இல்லை**